தபால்
31 மார் 2001

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பணியமைப்பு — பொதுப்பணித்துறை நிலநீர் பிரிவு — சில பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் முதுகலை வேதியியல் பட்டங்களை உதவி நில வேதியியலாளர் பதவிகளுக்கு தேர்வு/நியமனம் செய்வதற்கு தகுதியான கல்வித் தகுதியாக அங்கீகாரம் செய்தல் — ஆணை வெளியிடப்படுகிறது.

---

**097802**

பொதுப்பணி(டி2)த் துறை

அரசு ஆணை(நிலை) எண்: 163

நாள் 23.3.2001.

திருவள்ளுவராண்டு 2032,
விக்கிரம பங்குனி 10.

படிக்கப்பட்டது:—

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடித எண் 5958/ஆர்.என்.டி. எப்1/98, நாள் 20.10.99.
2. தலைமைப் பொறியாளர்(மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்), கடித எண் இ2(2)/6299/2000/சிஆர்(10), நாள் 10.7.2000.

0—0—0

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசு தேர்வாணைக்குழு செயலாளர் அவர்கள், பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பல்வேறு பட்டப் படிப்புகளை/முதுகலைப் பட்டப்படிப்புகளை அரசின் வேலை வாய்ப்புகளுக்கு அங்கீகாரம் செய்வதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது, பொதுப்பணித்துறை நிலநீர் பிரிவில் உள்ள உதவி நில வேதியியலாளர் பதவிக்கு தேர்வு செய்வதற்கு கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் வேதியியல் முதுகலைப் பட்டங்களை அங்கீகாரம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளது எனத் தெரிவித்து இதற்கான அரசின் ஆணையினைக் கோரியிருந்தார்:—

(1) காந்திகிராம ஊரக கல்வி நிலையத்தால் வழங்கப்படும் செயல்முறை சார்ந்த வேதியியல் முதுகலைப்பட்டம். (M.Sc., Applied Chemistry)

(2) பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் செயல்முறை சார்ந்த வேதியியல் முதுகலைப் பட்டம். (M.Sc. Applied Chemistry)

(3) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்சார் வேதியியல் முதுகலைப் பட்டம். (M.Sc. Industrial Chemistry)

(4) அழகப்பா பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்சார் வேதியியல் முதுகலைப்பட்டம். (M.Sc. Industrial Chemistry)

(5) சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கனிம வேதியியல் முதுகலைப்பட்டம். (M.Sc. Inorganic Chemistry)

இந்த முதுகலைப்பட்டப் படிப்புகளை அங்கீகாரம் செய்யலாமென தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு, நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

/த.பி.பா./

2. பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்ட குழுவின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து ஏற்றுக் கொள்கிறது. அவ்வாறே கீழ்க்காணும் வேதியியல் முதுகலைப் பட்டங்களை பொதுப்பணித்துறை நிலநீர் பிரிவில் உள்ள உதவி நில வேதியியலாளர் பதவிக்கு தேர்வு/நியமனம் செய்வதற்கு தகுதியான கல்வித் தகுதியாக அங்கீகரித்து அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

1. காந்தி கிராம ஊரகக் கல்வி நிலையம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் செயல்முறை சார்ந்த வேதியியல் முதுகலைப் பட்டம். (M.Sc. Applied Chemistry)

2. பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் அழகப்பா பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் தொழில்சார் வேதியியல் முதுகலைப்பட்டம். (M.Sc. Industrial Chemistry)

3. சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கனிம வேதியியல் முதுகலைப் பட்டம். ( M.Sc. Inorganic Chemistry)

3. பொதுப்பணித்துறையில் நிலநீர்ப் பிரிவில் உதவி நில வேதியியலாளர் பதவிகளுக்கான தற்காலிக விதிகளுக்கு திருத்தம் வெளியிடுவதற்கான தேவையான கருத்துருக்களை உடன் அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (மாநில நில (மற்றும்) மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.பி. குப்தா,
அரசு செயலாளர்.

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்), பொதுப்பணித்துறை,
சென்னை-600 005.
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை-2.

நகல்:-

பணியாளர் (மற்றும்) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
அமைச்சர் (பொதுப்பணி (மற்றும்) வனம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஏ, பி, சி, டி மற்றும் ஆர் பிரிவுகள், பொதுப்பணித்துறை, சென்னை-9.

/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/

29 3 2001
பிரிவு அலுவலர்.